## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## பதினோராம் பத்து

### நான்காம் திருமொழி - நிலையிடம்
### அவதாரங்களின் மகிமை

** நிலை இடம் எங்கும் இன்றி நெடு வெள்ளம்
உம்பர் * வள நாடு மூட இமையோர் *
தலை இட மற்று எமக்கோர் சரண் இல்லை
என்ன * அரண் ஆவன் என்னும் அருளால் **
அலை கடல் நீர் குழம்ப அகடாட
ஓடி * அகல் வான் உரிஞ்ச * முதுகில்
மலைகளை மீது கொண்டு வரு மீனை
மாலை * மறவாது இறைஞ்சு என் மனனே! 1

செரு மிகு வாள் எயிற்ற அரவொன்று
சுற்றித் * திசை மண்ணும் விண்ணும் உடனே *
வெருவர வெள்ளை வெள்ள முழுதும்
குழம்ப * இமையோர்கள் நின்று கடைய **
பரு வரை ஒன்று நின்று முதுகில்
பரந்து * சுழலக் கிடந்து துயிலும் *
அரு வரை அன்ன தன்மை அடல் ஆமை
ஆன * திருமால் நமக்கோர் அரணே 2

தீதறு திங்கள் பொங்கு சுடர் உம்பர்
உம்பர் * உலகு ஏழினோடும் உடனே *
மாதிர மண் சுமந்த வட குன்று
நின்ற * மலை ஆறும் ஏழு கடலும் **
பாதமர் சூழ் குளம்பின் அக மண்டலத்தின் *
ஒரு பால் ஒடுங்க வளர் சேர் *
ஆதி முன் ஏனம் ஆகி அரணாய
மூர்த்தி * அது நம்மை ஆளும் அரசே 3

தளை அவிழ் கோதை மாலை இரு பால்
தயங்க * எரி கான்ற இரண்டு தறுகண் *
அளவெழ வெம்மை மிக்க அரியாகி
அன்று * பரியோன் சினங்கள் அவிழ **
வளை உகிர் ஆளி மொய்ம்பின் மறவோனது ஆகம் *
மதியாது சென்று ஒரு உகிரால் *
பிளவெழ இட்ட குட்டம் அது வைய மூடு *
பெரு நீரின் மும்மை பெரிதே 4

வெந்திறல் வாணன் வேள்வி இடம் எய்தி *
அங்கோர் குறள் ஆகி மெய்ம்மை உணர *
செந்தொழில் வேத நாவின் முனி ஆகி *
வையம் அடி மூன்று இரந்து பெறினும் **
மந்தர மீது போகி மதி நின்று
இறைஞ்ச * மலரோன் வணங்க வளர் சேர் *
அந்தரம் ஏழினூடு செல உய்த்த
பாதம் அது * நம்மை ஆளும் அரசே 5

இரு நில மன்னர் தம்மை இரு நாலும்
எட்டும் * ஒரு நாலும் ஒன்றும் உடனே *
செரு நுதலூடு போகி அவர் ஆவி
மங்க * மழு வாளில் வென்ற திறலோன் **
பெரு நில மங்கை மன்னர் மலர் மங்கை
நாதர் * புல மங்கை கேள்வர் புகழ் சேர் *
பெரு நிலம் உண்டு உமிழ்ந்த பெரு வாயர் ஆகி
அவர் * நம்மை ஆள்வர் பெரிதே 6

இலை மலி பள்ளி எய்தி இது மாயம்
என்ன * இனம் ஆய மான் பின் எழில் சேர் *
அலை மலி வேற்கணாளை அகல்விப்பதற்கு *
ஓர் உருவாய மானை அமையா *
கொலை மலி எய்துவித்த கொடியோன்
இலங்கை * பொடியாக வென்றி அமருள் *
சிலை மலி செஞ்சரங்கள் செல உய்த்த
நங்கள் * திருமால் நமக்கோர் அரணே 7

முன் உலகங்கள் ஏழும் இருள் மண்டி உண்ண *
முதலோடு வீடும் அறியாது *
என் இது? வந்தது என்ன இமையோர்
திசைப்ப * எழில் வேதம் இன்றி மறைய **
பின்னும் வானவர்க்கும் முனிவர்க்கும்
நல்கி * இருள் தீர்ந்து இவ்வைய மகிழ *
அன்னம் அதாய் இருந்து அங்கு அற நூல்
உரைத்த * அது நம்மை ஆளும் அரசே 8

துணை நிலை மற்றெமக்கோர் உளது என்றிராது *
தொழுமின்கள் தொண்டர்! * தொலைய
உண முலை முன் கொடுத்த உரவோளது ஆவி *
உக உண்டு வெண்ணெய் மருவி **
பணைமுலை ஆயர் மாதர் உரலோடு
கட்ட * அதனோடும் ஓடி அடல் சேர் *
இணை மருதிற்று வீழ நடை கற்ற
தெற்றல் * வினை பற்றறுக்கும் விதியே 9

** கொலை கெழு செம்முகத்த களிறு ஒன்று
கொன்று * கொடியோன் இலங்கை பொடியா *
சிலை கெழு செஞ்சரங்கள் செல உய்த்த
நங்கள் * திருமாலை வேலை புடை சூழ் **
கலி கெழு மாட வீதி வயல் மங்கை
மன்னு * கலிகன்றி சொன்ன பனுவல் *
ஒலி கெழு பாடல் பாடி உழல்கின்ற
தொண்டர் * அவர் ஆள்வர் உம்பர் உலகே 10

**அடிவரவு:** நிலை செருமிகு தீதறு தளை வெந்திறல் இருநிலம் இலைமலி முன் துணை கொலை மான்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---